156

Silent Reading Series

(IN TAMIL)

BOOK II

23 JAN 1948
MADRAS

BY

M. S. SUNDARESWARAN, M.A., L.T.

Coimbatore.

2176

THE NATIONAL PUBLISHING Co.,

12, SECOND LINE BEACH, MADRAS.

Price As. 3.

மௌன வாசிப்பு வரிசை

இரண்டாம் புத்தகம்

217

ஆசிரியர் :
M. S. சுந்தரேசுவரன், M.A., L.T.,

894. 8113

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JAN 1943
MADRAS

நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி,
12, சகண்டு லேன் பீச்சு, சென்னை.

பதிப்புரிமை] [விலை அணா, 3

031, 3

முதற்பதிப்பு, 1941.
இரண்டாம் பதிப்பு, 1942.

Approved by the Text-Book Committee, Madras
for Class Libraries:
Vide Fort St. George Gazette Part I-B Page 96 of the Consolidated
List of approved books for 1942, dated June 2, 1942.

The B. N. Press, Madras.

முன்னுரை

தாய் மொழிப் பயிற்சியில் வாசிப்பு முக்கியமான பாக மாகும். வாசிப்பு, வாய் விட்டு வாசித்தல், மௌன வாசிப்பு என இரு வகைப்படும். வாழ்க்கையில் மக்களுக்கு அதிகமாகப் பயன்படுவது மௌன வாசிப்பே. ஐந்தாம் வகுப்பு முடிக்கும் முன்பே, மற்றப் பாடங்களுக்குரிய புத்தகங்களைப் படித்து விஷயங்களை அறிய, குழந்தைக்கு மௌன வாசிப்பு அவசிய மாகிறது. இப்படியிருந்தும், நம் பாடசாலைகளில் மௌன வாசிப்பு வெகு காலமாகக் கவனிக்கப்படாமலே இருந்து வந் தது. கல்வி இலாக்காவில் சமீபத்தில் வெளியிட்ட பாடத் திட் டத்தால் இக்குறை நீங்க இடம் ஏற்பட்டது.

வாய் விட்டு வாசிப்பதற்கும் மௌன வாசிப்புக்கும் அவசியமாகும் பழக்கங்கள் வேறு. ஆகவேதான், வாய் விட்டு வாசிப்பதோடு மௌனமாக வாசிப்பதிலும் முதலிலிருந்தே பயிற்சி செய்விக்க வேண்டுமென வற்புறுத்தப்படுகிறது. முதல் வகுப்பில் மௌன வாசிப்புச் சிறிதளவேதான் சாத்தியமாகும். இரண்டாம் வகுப்பில் அதன் விகிதம் 40 சத வீதம் இருக்க வேண்டும். மூன்றும் வகுப்பில் இந்த விகிதம் 60 சத வீதமாக உயர்ந்து, படிப்படியாக அதிகரித்துக்கொண்டே போக வேண் டும். ஆகவேதான், மூன்றும் வகுப்பிலிருந்து மௌன வாசிப் புக்கெனத் தனிப் புத்தகங்கள் அவசியமாகின்றன.

தாய்மொழிப் பயிற்சியில் கதைகள் முக்கியமானவை யாகும். கதை சொல்லவும், கதை கேட்கவும், கதை படிக் கவும் குழந்தைகள் ஆவலுள்ளவர்களாயிருப்பார்கள். ஆகவே,

மௌன வாசிப்புக்கென எழுதிய இப்புத்தகங்களில் கதைகளே பெரும்பாலும் சேர்க்கப்பட்டுள்ளன.

மௌன வாசிப்புப் பயிற்சி பயனளிக்க வேண்டுமாயின், அதற்கான புத்தகங்களைச் சாதாரண வாசகபுத்தகங்களை வகுப்பில் நடத்துவதுபோல நடத்தலாகாது. குழந்தைகள் தாங்களே, அவற்றைப் படிக்கவேண்டும். வாசிப்பில் வேகம், உச்சரிப்பின்மை, உதடு அசையாதிருத்தல், பொருளறிதல் ஆகிய இலட்சணங்கள் இவ்வாசிப்புக்கு வேண்டியவை. இவை ஒரே நாளில் கிட்டமாட்டா; தொடர்ந்த முயற்சியாலும் பழக்கத்தாலுந்தான் ஏற்படும். மூன்றும் வகுப்பில் பொருளறிவதோடு, வேகமும், உச்சரிப்பை ஓரளவுக்குக் குறைத்தலும் நோக்கமாக இருக்க வேண்டும். நான்காம் வகுப்பில் உச்சரிப்பின்மையும் குறைவடைந்த உதடு அசைதலும் உண்டாக வேண்டும். ஐந்தாம் வகுப்பில் மௌன வாசிப்பின் இலட்சணங்கள் அனைத்தும் முழுதும் கிட்ட வேண்டும்.

ஒவ்வொரு கதையின் கீழும் விஷய ஞானத்தைச் சோதிக்கக் கேள்விகளும் பயிற்சிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு விடைகளைக் குழந்தைகளிடம் பெறுவதோடு, அவர்களையே கதையைச் சொல்லவும், நடிக்கவும், வேறு விதமாக முடித்துச் சொல்லவும் பழக்குவது நலம் பயப்பதாகும்.

கோயமுத்தூர், 9—12—1940. M. S. சுந்தரேசுவரன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JAN 1943
MADRAS

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	தன் வயிறு தண்டி	...	7
2.	காகமும் பாம்பும்	...	10
3.	ஔவையாரும் மாடு மேய்க்கும் பையனும்	...	14
4.	குருடனும் நாயும்	...	17
5.	கம்பரும் வேலியும்	...	20
6.	அன்பின் உயர்வு	...	23
7.	புத்தியுள்ள மந்திரி	...	26
8.	தைரியமுள்ள சிறுமி	...	28
9.	புத்தியுள்ள குழி முயல்	...	31
10.	சேவலும் நரியும்	...	34
11.	குரங்கும் சிங்கங்களும்	...	37
12.	வேடனும் புறாக்களும்	...	40
13.	ஒரு பெண்ணின் வீரச் செயல்	...	43
14.	காக்கையும் குறவனும்	...	46

மௌன வாசிப்பு வரிசை

(இரண்டாம் புத்தகம்)

1. தன் வயிறு தண்டி



1. ஒரு பெரிய எலிக்கு ஒரு நாள் ஒரு தட்டு அப்பம் கிடைத்தது. அதனால், அது மிகவும் சந்தோஷப்பட்டது. பக்கத்திலிருந்த குஞ்சு எலிகள் அதை நோக்கி வரும் சத்தம் கேட்டது.

2. "இந்தத் தட்டு அப்பம் எனக்குக் கிடைத்தது. அந்தக் குஞ்சு எலிகள் வந்தால், அவைகளுக்

கும் இதில் பங்கு கொடுக்க வேண்டி வரும். நானே இதை முழுதும் தின்பேன்," என்று எண்ணிக் கொண்டு, அந்த எலி அப்பத்தை கடித்துக் கடித்துத் தின்றது.

3. வேண்டுமளவு தின்று வயிறு நிரம்பியும், அதற்கு ஆசை விடவில்லை. அது வயிறு ஊதி ஊதிப் பெருக்க, மேலும் மேலும் கொஞ்சம் கொஞ்சமாகத் தின்றது.



4. மிதமிஞ்சித் தின்றதனுல், எலி மூச்சுவிட முடியாமல், திணறிக்கொண்டு கஷ்டப்பட்டது. அச்சமயத்தில் எலிக்குஞ்சுகள் அதைத் தேடிக் கொண்டு அங்கே வந்தன; அது கஷ்டப்படுவதைப் பார்த்து மனம் வருந்தின.

5. "அண்ணே! அண்ணே!! ஏன் இந்தக் கஷ்டம்? எதனுல் இப்படி நேர்ந்தது?" என்று குஞ்சு எலிகள் கேட்டன.

6. "தம்பிமாரே, கேளுங்கள்; நான் எனக்குக் கிடைத்த அப்பத்தை உங்களுககுக் கொடுக்க மன மில்லாமல் முழுதும் தின்றேன். நீங்கள் பசியால் வருந்துகிறீர்கள். நான் உயிர் போகும் நிலையில் இருக்கிறேன்," என்று பெரிய எலி வருத்தத்தோடு சொன்னது.

7. பிறகு சிறிது நேரத்திற்குள் அது மூச்சு விட முடியாமல் இறந்தது.

8. "ஐயோ! பாவம்! பிறருக்குக் கொடுத்துத் தானும் தின்னுமல் மிதமிஞ்சித் தின்றதனுலல்லவா இந்தக் கஷ்டம் வந்தது!" என்று சொல்லிக் கொண்டே குஞ்சு எலிகள் தஙகள் இருப்பிடம் சென்றன.

பயிற்சி :

1. இக்கதையின் கடைசிப பாகத்தை நான்கு வாக்கியங் களில் சொல்லு.
2. பெரிய எலி என்ன குணமுள்ளது ?
3. இந்தக் கதையைக் குஞ்சு எலிகளில் ஒன்று சொல்லு வது போலச் சொல்லு
4. இந்தக் கதையைச் சந்தோஷமாக முடியும் வகையில் முடித்துச் சொலலு.

2. காகமும் பாம்பும்



1. ஒரு மரத்தில் காகம் ஒன்று கூடு கட்டி முட்டை இட்டது, அம்மரத்தின் அடியில் ஒரு பொந்து இருந்தது. அதிலிருந்த பாம்பு, காகம் இடும் முட்டைகளை உடைத்துக் குடித்து வந்தது.

3. தனக்கு நேர்ந்த கஷ்டத்திற்குக் காகம் மிகவும் மனம் வருந்தியது. 'பாம்பினிடமிருந்து முட்டைகளைக் காப்பது எவ்விதம்!' என அது ஏங்கி நின்றது. அப்போது அதற்குத் தனக்குச் சினேக மான நரியின் ஞாபகம் வந்தது.

3. உடனே அது நரியினிடம் போய், "நரி யாரே, பாழும் பாம்பு என் முட்டைகளை எல்லாம்

குடித்துவிடுகிறதே! அதைக் கொல்ல ஒரு வழி இல்லையா?" எனக் கேட்டது.

4. "சிநேகிதனே, வருந்தாதே! நான் இதற்கு ஓர் உபாயம் சொல்லுகிறேன்; அதன்படி நீ செய்வாயா?" என்று நரி கேட்டது.



5. "நரியாரே, அதற்காகத்தானே நான் உம்மிடம் வந்தேன்! சொல்லும்; நான் அவ்விதமே செய்கிறேன்," என்று காகம் சொல்லியது.

6. "இராணி குளிக்கும்போது தன் முத்து மாலையைக் கழற்றி வைப்பாள். அப்பொழுது நீ அதை எடுத்துக்கொண்டு வந்து மரப் பொந்தில் போட்டுவிடு," என்று நரி யோசனை சொன்னது.

7. மறு நாள் காகம், அப்படியே இராணி குளிக்கும்போது, அவள் கழற்றி வைத்த முத்து மாலையைக் கொத்திக்கொண்டு வந்து மரப்பொந்தில் போட்டது. காகம் முத்துமாலையை எடுத்துப் போவதை அறிந்த அரண்மனை வேலையாட்கள், அதன் பின்னாலேயே ஓடி வந்தார்கள்; காகம் முத்து மாலையைப் பொந்தில் போட்டதைப் பார்த்தார்கள்.



8. உடனே, அவர்கள் கோடரிகளைக்கொண்டு பொந்தைப் பிளந்தார்கள். அதிலிருந்த நாகம், படம் எடுத்து வெளியே வந்தது. வேலையாட்கள் தடிகளால் அதை அடித்துக் கொன்றார்கள்.

9. பிறகு, அவர்கள் பொந்தைச் சோதித்துப் பார்த்தார்கள். அதில் முத்து மாலை இருந்தது. அவர்கள் அதை எடுத்துக்கொண்டு சந்தோஷமாய் அரண்மனைக்குத் திரும்பினார்கள்.

10. "பாம்பு ஒழிந்தது! இனி நாம் கவலையில்லாமல் இம்மரத்தில் சுகமாய் வாழலாம்!" என்று காகம் எண்ணிச் சந்தோஷம் அடைந்தது.

பயிற்சி :

1. இக்கதையை ஆறு வாக்கியங்களில் சுருக்கமாக எழுது.
2. இந்தக் கதையிலிருந்து நரி எப்படிப்பட்ட பிராணி என்று தெரிகிறது ?
3. காகம் முத்து மாலையை எடுத்துக்கொண்ட பின்பு என்ன நடந்தது ?
4. வேலையாட்களுள் ஒருவன் முத்து மாலை போன பின் நடந்ததைச் சொல்வது போலச் சொல்லு.

3. ஔவையாரும்

மாடு மேய்க்கும் பையனும்



1. ஒருநாள் தமிழ்ப் புலவராகிய ஔவையார் காட்டு வழியே போய்க்கொண்டிருந்தார். நடந்த களைப்பினால் அவருக்குத் தாகம் உண்டாயிற்று.

2. வழியில் மாடு மேய்க்கும் பையன் ஒருவன் நாவல் மரத்தில் ஏறிப் பழம் பறித்துத் தின்று கொண்டிருந்தான்.

3. "அப்பா, எனக்கு அதிக தாகமாய் இருக்கிறது. நீ எனக்குச் சில பழம் பறித்துப் போடு

வாயா?" என்று ஔவையார் பையனைக் கேட்டார்.

4. "பாட்டி, உனக்குச் சுடும் பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா?" என்று பையன் கேட்டான்.

5. அவன் சொன்னது ஔவையாருக்கு விளங்கவில்லை. 'நாவற்பழம் எப்படிச் சுடும்!' என்று அவர் ஆச்சரியப்பட்டார்; என்றாலும், அவன் எண்ணியதை அறிய விரும்பித் தமக்குச் சுடும் பழமே வேண்டுமென்று சொன்னார்.

6. உடனே பையன் கிளையை உலுக்கி நன்றாய்க் கனிந்த பழங்களை உதிர்த்தான்; "பாட்டி, உனக்கு வேண்டிய மட்டும் சுடும் பழம் உதிர்த்திருக்கிறேன். ஊதி ஊதித் தின்!" என்றான்.

7. ஔவையார் பழங்களைத் தின்பதற்காகப் பொறுக்கினார். மணல் தரையில் விழுந்ததால், அவற்றில் மணல் ஒட்டிக்கொண்டிருந்தது. அதைப் போக்க ஊத வேண்டுமாதலால், அப்பழத்தைச் சுடும் பழம் எனப் பையன் சொன்னதன் கருத்து அப்போதுதான் ஔவையாருக்குத் தெரிந்தது.

8. "நாம் மிகப் படித்தவள் என்று எண்ணி யிருந்தோமே! மாடு மேய்க்கும் இந்தப் பையன் நம்மை ஒரு நிமிஷத்தில் திகைக்கச் செய்துவிட் டானே! ஆகையால், எப்படிப்பட்டவரிடமிருந் தும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் உண்டு," என்று ஔவையார் நினைத்தார்.

பயிற்சி :

1. ஔவையார் எதற்குத் திகைக்கலானார்?
2. கனிந்த பழத்தை மாடு மேய்க்கும் பையன் ஏன் 'சுடும் பழம்' என்றான்?
3. இதிலிருந்து ஔவையார் அறிந்ததென்ன?
4. இக்கதையை ஔவையார் சொல்லுவது போலச் சொல்லு.

4. குருடனும் நாயும்



1. ஒரு குருடன் பாய் முடைந்து விற்றுப் பிழைத்து வந்தான். அவனிடம் நாய் ஒன்று இருந்தது. அவன் அதனை அன்பாய் வளர்த்து வந்தான்.

2. குருடன், தான் முடைந்த பாய்களை விற்கச் சாலைக்குப் போவான். நாயும் அவனுடன் போகும். அவன் வீடு திரும்பும்போதுதான் நாயும் திரும்பும்.

3. ஒரு நாள் குருடனுக்கு உடம்பு சுகமில்லை. அதனால், அன்று பாய் முடைய அவனால் முடியவில்லை. ஆகவே, சாப்பாட்டுக்கு ஒன்றுமில்லாமல் அவன் பசியால் வருந்தினான்.

4. நாய் அதைத் தெரிந்துகொண்டது. சாப்பாட்டு வேளையில் அது அரசன் அரண்மனைக்குள்

ஓடிற்று. அது அங்கு அரசன் சாப்பிடுவதற்காக இலை போட்டிருந்த இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டது.

5. அரசன் சாப்பிடுவதற்காக வழக்கம்போல வந்தான். சேவகர்களும் அவன் பின்னே வந்தார்கள். அவர்கள் நாயைக் கண்டதும் அதை அடித்துத் துரத்தப் போனார்கள்.

6. "நில்லுங்கள்! பாவம்! நாய்க்குப் பசியாய் இருக்கிறது போலும்!" என்று அரசன் சொல்லி, ஆட்களைத் தடுத்தான்.

7. பிறகு அரசன் தனக்கு வைத்திருந்த தின்பண்டங்களை ஒரு தட்டில் வைத்து, அதை நாயின் முன் வைத்தான். நாய் அந்தப் பண்டங்களில் ஒன்றையும் தின்னாமல், தட்டைக் கௌவி எடுத்துக் கொண்டு வெளியே ஓடிற்று.

8. "இதென்ன ஆச்சரியம்! நீங்கள் அதன் பின் ஓடி நடப்பதைப் பார்த்து வாருங்கள்," என்று அரசன் சேவகர்களுக்குக் கட்டளையிட்டான்.

9. நாய் தன் எசமானனுன குருடன்முன் தட்டைக் கொண்டு போய் வைத்தது. குருடன் அதிலிருந்த பண்டங்களைத் தானும் சாப்பிட்டு, நாய்க்கும் வைத்தான். நாயும் தின்று சந்தோஷமாய் இருந்தது.

10. இதைப் பார்த்திருந்த சேவகர்கள், அரசனிடம் போய் நடந்ததைச் சொன்னூர்கள். நாயின் நன்றிக்கு அரசனும் சேவகர்களும் மெச்சி அதைப் பெரிதும் புகழ்ந்தார்கள்.

பயிற்சி :

1. இந்தக் கதையை அரசன் நாயைக் கண்டதிலிருந்து தானே சொல்வது போலச் சொல்லு.
2. நாய் தட்டை எடுத்து ஓடினது அரசனுக்கு ஏன் ஆச்சரியமாய் இருந்தது?
3. இக்கதையிலிருந்து நாயின் குணம் என்னவென்று தெரிகிறது?
4. நாயின் நன்றியை விளக்க இது போல நீ ஒரு கதை சொல்லு.

5. கம்பரும் வேலியும்



1, கவிச் சக்கரவர்த்தியாராகிய **கம்பர்,** ஒரு சமயம் தன்னந்தனியாய்ப் பிரயாணம் செய்தார். **வேலி** என்னும் தாசியின் வீட்டு வழியே போகும் போது அவருக்குப் பசி எடுத்தது.

2. வேலி தன் கொல்லையில் ஒரு மண் சுவர் கட்டப் பல தரம் பிரயத்தனம் செய்தாள். அங்கிருந்த பிசாசு ஒன்று, வைத்த சுவரை உடனே வீழ்த்திவிடும். ஆகையால், கூலியாட்கள் குறுணி நெல் கூலியை வாங்காமலே போனார்கள்.

3. இதை அறிந்த கம்பர், தம் பசியைத் தீர்த்துக்கொள்ள அவ்வேலையை ஏற்றுக்கொண்டார். மாலையில் சுவர் கட்டியாய்விட்டது. கூலி கொடுப்

பதற்கு முன் வேலி சுவரைப் பார்க்க வந்தாள். உடனே சுவர் திடீரென்று விழுந்தது.

4. அதில் ஏதோ மோசம் இருக்கிறது என்பதைக் கம்பர் அறிந்தார்; மறு நாள் அவ்வேலையைச் செய்து முடித்துக்கொடுப்பதாக வேலிக்கு வாக்களித்தார்; அன்றிரவெல்லாம் பட்டினியாய் இருந்தார்.



5. பொழுது விடிந்தது. விழுந்த சுவரைத் திரும்பவும் கட்டக் கம்பர் அவ்விடம் வந்தார்; கஷ்டப்பட்டு வேலை செய்து, மாலை நேரத்திற்குள் சுவரைக் கட்டி முடித்தார்.

6. மாலையில் வேலி சுவரைப் பார்க்க வந்தாள். மறுபடியும் சுவர் கீழே விழும்போல இருந்தது.

உடனே கம்பர் ஒரு பாட்டைப் பாடினர். அதைக் கேட்ட பிசாசு பயந்து, அவ்விடம் விட்டு ஓடிப் போயிற்று. சுவரும் விழாமல் நின்றது.

7. வேலி, கம்பர் பெரியவர் என்பதை அப்போதுதான் தெரிந்துகொண்டாள்; அவரை அங்கேயே இருக்கும்படி உபசரித்தாள். கம்பர் அதற்கு இணங்கவில்லை; தம் கூலியாகிய குறுணி நெல்லை வாங்கிக்கொண்டு பிரயாணமானர்.

பயிற்சி :

1. வேலி வீட்டு மண் சுவர் ஏன் விழுந்துகொண்டே இருந்தது ?
2. கம்பர் அதை நிற்கச் செய்ய என்ன செய்தார் ?
3. வேலி ஏன் கம்பரை அவ்விடமே இருக்க வேண்டினள் ?
4. இக்கதையை வேலி சொல்வது போலச் சொல்லு.
5. கம்பர் பாடிய பாட்டு:—

“ மல்கொண்ட திண்புயத்தான் மாநகர்விட் டுங்குவந்தேன்;
சொல்கொண்ட பாவின் சுவையறிவார் ஈங்கிலையே !
வில்கொண்ட வாள்நுதலாள் வேலிதருங் கூலி
நெல்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே!”

—இந்தப் பாட்டின் விஷயத்தை எழுது.

6. அன்பின் உயர்வு



1. ஓர் ஏழைக் குடியானவன் ஒரு நாள் தன் சட்டையைக் கழற்றிக் குடிசையில் மாட்டிவைத்தான். அன்று காற்று வேகமாய் அடித்தது. அதற்குப் பயந்த சிட்டுக்குருவி ஒன்று, குடிசைக்குள் பறந்து வந்து, குடியானவன் சட்டைப் பையில் தங்கியது.

2. சிட்டுக்குருவி அந்தச் சட்டைப் பையில் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தது, தாயும் குஞ்சுகளும் பையில் சந்தோஷமாய் வாழ்ந்து வந்தன.

3. ஒரு நாள் குடியானவனுக்குக் குளிர் எடுத்தது. அதனால், அவன் தன் சட்டையைப் போட்டுக்

கொள்ள அதை எடுக்கப் போனுன். பைக்குள் ளிருந்த குருவியும் குஞ்சுகளும் உடனே கத்தின.

4. அவற்றைத் துரத்திக் கஷ்டப்படுத்த அவ னுக்கு மனமில்லை. ஆகையால், அவன சட்டையை விட்டுவிட்டுப் போய்விட்டான். குருவியும் குஞ்சு களும் சந்தோஷமாய்ச் சட்டைப் பையிலேயே வாழ்ந்தன.



5. சில நாட்கள் ஆயின. குஞ்சகளுக்கு இறக் கைகள் நன்ருய் வளர்ந்துவிட்டன. ஆகையால், குருவியும் குஞ்சுகளும் வெளியே பறந்து போயின.

6. பிறகு குருவிகளின் சத்தம் குடியானவனுக் குக் கேட்கவில்லை. அவன் அவை என்ன ஆயின என்பதை அறியச் சட்டைப் பையைப் பார்த்தான்.

குருவிகள் பறந்து போய்விட்டதை அறிந்தான்; பையினுள் ஒரு தங்க மோதிரத்தைக் கண்டு எடுத்தான்; பையில் தங்கியிருந்த குருவியே அதைக் கொண்டு வந்து வைத்திருக்க வேண்டும் என்று எண்ணினன்; "ஆஹா! என்ன ஆச்சரியம்! குருவியின் நன்றிதான் என்னே!" என்று வியந்து சந்தோஷப்பட்டான்.

பயிற்சி :

1. குடியானவன் ஏன் சட்டையைப் போட்டுக்கொள்ளாமல் அது இருந்த இடத்திலேயே விட்டுவிட்டான்?
2. குருவி ஏன் பையில் மோதிரத்தைப் போட்டுவிட்டுப் போயிற்று?
3. இக்கதையிலிருந்து மனிதருக்கு இருக்க வேண்டிய சிறந்த குணம் யாது என்று நீ தெரிந்துகொள்கிருய்?
4. இக்கதையைக் குடியானவன் சொல்லுவது போலச் சொல்லு.

7. புத்தியுள்ள மந்திரி



1. ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். அவன் மிகவும் கொடியவன். அவன் குடிகளை அதிகமாக வருத்தி வந்தான். குடிகள் அவன் கொடுமையைப் பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டார்கள்.

2. அந்த அரசனிடம் ஒரு மந்திரி இருந்தான். அவன் மிகவும் நல்லவன். அரசன் குணம் அவனுக்கும் பிடிக்கவில்லை. அவன் அரசனை எப்படித் திருத்துவது என்று கவலையாய் இருந்தான்.

3. ஒரு நாள் மாலையில் அரசன் வெளியே உலாவப் போனான். மந்திரியும் சேவகர்களும் அவனுடன் போனார்கள். அவர்கள் நெடுந்தூரம் உலாவினார்கள்; பொழுது சாயும் நேரமாகவே, ஊருக்குப் போகத் திரும்பினார்கள்.

4. திரும்பி வரும்போது வானம் கறுத்தது; புயல்காற்று அடித்தது; பெருமழை பெய்யும்போல இருந்தது.

5. "மந்திரி, மழை பெய்யும் போல இருக்கிறதே ! நாம் வேகமாய்ச் செல்ல வேண்டும்; மழை வருமுன் அரண்மனையை அடைய வேண்டும்," என்று மன்னன் சொன்னான்,

6. "அரசரே, தங்களுக்கு ஏன் வீண் பயம் ? தாங்கள் அரசாளும் நாட்டிற்குள் மேகமும் வர அஞ்சுமே! ஆகையால், நாம் மெதுவாகவே செல்லலாம்," என மந்திரி அரசன் மனத்தில் அவன் குற்றம் படும்படி சொன்னான்.

7. "ஆஹா ! நாம் கொடுங்கோல் செலுத்துவதனால் அல்லவா மந்திரி இவ்விதம் சொல்லுகிறான் ! இனி நாம் செங்கோல் செலுத்த வேண்டும்," என்று வெட்கத்துடன் எண்ணிக்கொண்டு அரசன் ஊர் திரும்பினான்.

8. அன்றுமுதல் அரசன் குடிகளை அன்புடன் காப்பாற்றி ஆண்டு வந்தான். குடிகள் மந்திரியையும் அரசனையும் வாழ்த்தினார்கள்.

பயிற்சி :

1. அரசன் குணத்தை மாற்ற மந்திரிக்கு வாய்த்த சந்தர்ப்பம் என்ன ?
2. மந்திரி சொன்ன பதிலின் கருத்து என்ன ?
3. இக்கதையை மந்திரி சொல்வது போலச் சொல்லு.

8. தைரியமுள்ள சிறுமி



1. சீன தேசத்தில் ஒரு கிராமத்தில் ஒரு சிறுமி இருந்தாள். அவளுக்குப் பெற்றோர்களிடம் அன்பு அதிகம். அவளுடைய பெற்றோர்களும் அவளிடம் அன்பாய் இருந்தார்கள்.

2. அந்த ஊருக்குப் பக்கத்தில் குகை ஒன்று உண்டு. அதில் ஒரு பெரிய மலைப்பாம்பு வாழ்ந்து வந்தது. அது அடிக்கடி ஊருக்குள் வந்து, மனிதர்களைக் கொன்று விழுங்கிக்கொண்டிருந்தது.

3. இது அச்சிறுமிக்குத் தெரிய வந்தது. எங்குத் தன் பெற்றோர்களையும் அப்பாம்பு கொன்று விடுமோ என அவள் பயந்தாள்; அதை எப்படியாவது கொல்ல வேண்டுமென விரும்பினாள்.

4. "நான் போய் அப்பாம்பைக் கொன்று வருகிறேன். என்னை ஒரு கத்தியோடும் நாயோடும்

அனுப்புங்கள்," என்று அப்பெண் தன் பெற்றோர்களைக் கெஞ்சிக் கேட்டாள்.

5. அவள் பெற்றோர்கள், 'நம் குழந்தைக்கு அபாயம் நேரிடுமே!' என்று முதலில் பயந்தார்கள்; பிறகு அவளுக்கு ஒரு கத்தியைக் கொடுத்து நாயுடன் போய் வர அனுமதி கொடுத்தார்கள்.



6. சுவையுள்ள கட்டுச்சாதம் கட்டி எடுத்துக்கொண்டு நாயுடன் அப்பெண் குகைக்குப் புறப்பட்டாள்; அங்குச் சோற்று மூட்டையைக் கீழே வைத்துவிட்டு, ஒரு புதரின் பின் உருவின கத்தியோடு நின்றாள். நாயும் சோற்று மூட்டையின் பக்கம் நின்றது.

7. சிறிது நேரத்திற்குள் பாம்பு வெளியே வந்தது, சோற்றின் வாசனையைக் கண்டு மூட்டை

யண்டை நெருங்கியது. அதைப் பார்த்துக்கொண்டிருந்த அப்பெண், நாய்க்குக் கண்களால் சாடை காட்டினுள். உடனே நாய் குரைத்துக்கொண்டே பாம்போடு சண்டை செய்தது.

8. 'இதுதான் பாம்பைக் கொல்லத் தகுந்த சமயம்,' என்று அப்பெண் எண்ணினுள்; உடனே சந்தடி செய்யாமல் பாம்பின் பக்கமாக உருவின கத்தியோடு வந்தாள்; கிட்ட வந்ததும் கத்தியை ஒரே வீச்சாய் வீசிப் பாம்பின் தலையை வெட்டி எறிந்தாள்.

9. 'இனி ஊர் ஜனங்கள் பயமில்லாமல் வாழலாம்!' என்று எண்ணிக்கொண்டே அவள் ஊருக்குத் திரும்பினுள்; தான் பாம்பைக் கொன்ற செய்தியை எல்லோருக்கும் சொன்னுள். எல்லோரும் மகிழ்ந்து அவளுடைய தைரியத்திற்காக அவளைப் புகழ்ந்தனர்.

பயிற்சி :

1. சீனப்பெண் பாம்பைக் கொல்ல எண்ணியது ஏன்?
2. அவள் பாம்பைக் கொல்லச் செய்த உபாயம் என்ன?
3. ஊர் ஜனங்கள் அவளை எந்தக் குணத்திற்காகப் புகழ்ந்தார்கள்?
4. இந்தக் கதையை அப்பெண்ணே சொல்வது போலச் சொல்லு.

9. புத்தியுள்ள குழி முயல்



1. ஒரு காட்டில் ஓநாய், நரி, குழி முயல் ஆகிய மூன்றும் வாழ்ந்து வந்தன. குழி முயல் மற்ற இரண்டையும் அடிக்கடி தொந்தரவு செய்யும். ஆனால், அதைப் பிடிப்பது மற்ற இரண்டுக்கும் கஷ்டமாயிருந்தது.

2. "இந்தக் குழி முயலின் தொந்தரவு சகிக்க முடியவில்லையே! இதைக் கொல்ல நான் ஒரு வழி சொல்லுகிறேன். நீ அது போலச் செய்வாயா?" என்று ஓநாய் நரியைக் கேட்டது.

3. "குழிமுயலைக் கொல்ல நான் என்னவேண்டுமானாலும் செய்கிறேன். சொல்லு, பார்ப்போம்," என்றது நரி.

4. "நீ உன் இடத்தில் இறந்தாற்போலப் படுத்திரு. நீ இறந்துவிட்டாய் என்று நான் குழி முயலுக்குச் சொல்லுகிறேன். அது உன்னைப் பார்க்க வரும். அப்போது நீ அதைப் பிடித்துக் கொன்று விடு," என்று ஓநாய் சொன்னது.

5. "இது நல்ல யோசனை!" என்று சொல்லி விட்டு, இறந்து கிடப்பது போல நரி ஓரிடத்தில் படுத்திருந்தது.

6. இதற்குள் ஓநாய் ஓடிக் குழி முயலுக்கு இச்செய்தியைச் சொன்னது. குழிமுயல் நரியைப் பார்க்க அதன் இருப்பிடத்துக்கு ஓடிற்று.

7. குழிமுயல், இறந்ததுபோலப் படுத்திருந்த நரியைப் பார்த்தது; நரி உண்மையில் செத்துக் கிடக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பியது.

8. "நரியே, நீ செத்துவிட்டதாக ஓநாய் சொல்லுகிறதே! அது மெய்தானா?" என்று தூரத்தில் நின்றுகொண்டு குழி முயல் கேட்டது.

9. நரி சற்றேனும் பேசாமலும் அசையாமலும் கிடந்தது.

10. "செத்த நரி வாயைத் திறந்து வைத்திருக்கும் என்று சொல்வார்களே! உன் வாய் திறந்து இருக்கவில்லையே!" என்றது குழி முயல்.

11. உடனே நரி, தான் செத்ததாகக் காட்டுவதற்காக வாயைத் திறந்தது. குழிமுயல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வெளியே ஓடிப்போயிற்று.

பயிற்சி :

1. குழி முயலைக் கொல்ல ஓநாய் நரிக்குச் சொன்ன யோசனை என்ன?
2. நரி உயிரோடு இருக்கிறதா அல்லது செத்துவிட்டதா என்பதை அறியக குழிமுயல என்ன செய்தது?
3. இந்தக் கதையைக் குழி முயலே சொல்வது போலச் சொல்லு.
4. இக்கதையை முயல் மோசம் போனது போல முடித்துச் சொல்லு.

10. சேவலும் நரியும்



1. ஒரு வீட்டில் பல பிராணிகள் இருந்தன. அவற்ளோடு ஒரு சேவலும் இருந்தது. அது மிகவும் கர்வம் கொண்டிருந்தது.

2. "என்னைப் பார்! நான்தான் இப்பண்ணைக்கு மன்னன்," என்று வழியே போகிற எல்லாப் பிராணிகளிடமும் அது பெருமையுடன் சொல்லும்.

3. ஒரு நாள் நரி ஒன்று அவ்வழியே போயிற்று. சேவல் வழக்கம் போல, "என்னைப் பார்!" என்று கூவியது.

4. "நான் ஏன் உன்னைப் பார்க்க வேண்டும்?" என்று நரி கேட்டது.

5. "இது உனக்குத் தெரியாதா? நான்தான் இப்பண்ணைக்கு மன்னன். நான் என்ன வேண்டு மானாலும் செய்வேன்," என்று சேவல் பெருமை யாகச் சொல்லிற்று.

6. "அப்படியா? கண்களை மூடிக்கொண்டு கூவு; பார்ப்போம்," என்று நரி சொன்னது.

7. நரியின் சூதை அறியாமல் சேவல் கண்களை மூடிக்கொண்டு கூவ ஆரம்பித்தது. உடனே நரி அதை வாயில் கௌவிக்கொண்டு வேகமாய் ஓடிற்று.

8. இதைக் கண்ட குடியானவர்கள் நரியைப் பின் பற்றி ஓடினார்கள்.

9. "இப்போது ஓர் உபாயம் செய்து உயிர் தப்ப வேண்டும்," என்று சேவல் எண்ணியது.

10. "நரியே, உன்னைத் துரத்திக்கொண்டு அவர்கள் ஓடி வருவதைப் பார். உன்னை அவர்கள் பிடிக்க முடியாது என்று சொல்லிவிடு," என்று சேவல் சொல்லிற்று.

11. சேவல் சொன்னதைக் கேட்டு நரி கர்வம் கொண்டது; பின்புறம் திரும்பிச் சேவல் சொன்ன தைச் சொல்ல வாயைத் திறந்தது.



12. உடனே சேவல் குதித்து ஓடி அருகி லிருந்த மரத்தின்மேல் ஏறிக்கொண்டது. நரி மோசம் போனதற்கு வெட்கமடைந்து, ஓடிப் போயிற்று. பிறகு சேவல் கீழே இறங்கி வந்து சந் தோஷமாய்ப் பண்ணைக்குப் போயிற்று.

பயிற்சி :

1. நரி ஏன் சேவலைக் கண்ணை மூடிக்கொண்டு கூவச் சொன்னது ?
2. நரியினிடமிருந்து தப்பச் சேவல் என்ன உபாயம் செய்தது ?
3. இக்கதையினால் நீ தெரிந்துகொள்வது என்ன ?
4. இக்கதையைச் சேவல் சொல்வதுபோலச் சொல்லு.

11. குரங்கும் சிங்கங்களும்



1. ஒரு நாள் குரங்கு ஒன்று தீனிக்காகக் காடெங்கும் அலைந்தது. ஒன்றும் அகப்படவில்லை. கடைசியில் அது அக்காட்டில் ஓடும் ஓடையில் தண்ணீர் குடித்துவிட்டுக் கரையிலிருந்த ஒரு மரத்தினடியில் உட்கார்ந்திருந்தது.

2. அச்சமயத்தில், அக்காட்டில் வசிக்கும் ஆண் சிங்கம் ஒன்றும் பெண் சிங்கம் ஒன்றும் இரைக்காக ஓடைக்கு வந்தன. நெடுநேரம் காத்திருந்தும் ஒரு மிருகமும் அங்குத் தண்ணீர் குடிக்க வரவில்லை. அவை சுற்றிப் பார்க்கையில் மரத்தினடியில் இருக்கும் குரங்கைப் பார்த்தன. அதையாவது கொன்று தின்னலாம் என எண்ணி, அவையிரண்டும் சந்தடி செய்யாமல் சென்றன.

3. சிங்கங்கள் வருவதைக் குரங்கு தெரிந்துகொண்டது. உடனே அது வேகமாக மரத்தின் மீது ஏறி, உச்சியில் உட்கார்ந்துகொண்டது. ஏமாந்துபோன சிங்கங்கள் மரத்தின் அடியிலேயே இருந்தன; 'சிறிது நேரம் கழிந்த பிறகாவது குரங்கு கீழே இறங்கும். அப்போது அதை அடித்துத் தின்னலாம்,' என ஆவலுடன் காத்திருந்தன.



4. ஆனால், குரங்கு ஏமாறவில்லை. சிங்கங்களுக்குப் பயந்து அது மரத்தின் உச்சியிலேயே இருந்தது.

5. "குரங்கோ, இறங்காது. நம்மாலோ, மரம் ஏற முடியாது. மரத்தை முறித்து வீழ்த்தினால், குரங்கு அகப்பட்டுவிடும்," எனப் பெண் சிங்கம் சொன்னது.

6. ஆண் சிங்கமும் அதற்குச் சம்மதித்தது. உடனே அவை இரண்டும் மரத்தை வேகமாக

அசைத்தன. சற்று நேரத்தில் ஓடைப் பக்கமாக மரம் சாய்ந்து விழுந்தது.

7. மரத்தின் நீளம் ஓடையின் அகலத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்ததால், அதன் உச்சி அக்கரையில் சாய்ந்தது. 'இனித் தாமதித்தால் மோசம் வரும்!' எனத் தெரிந்த குரங்கு, கீழே குதித்து ஓடினது.

8. திரும்பவும் ஏமாந்து போன சிங்கங்கள். குரங்கைப் பிடிக்க ஓடையில் குதித்து நீந்தின, ஓடை ஆழமாயிருந்ததோடு, தண்ணீரும் வேகமாய் ஓடியதால், சிங்கங்களால் நீந்த முடியவில்லை. அவை அக்கரைக்குப் போகவும் முடியவில்லை; திரும்பவும் முடியவில்லை. ஆகவே, அவை இரண்டையும் தண்ணீர் அடித்துக்கொண்டு போயிற்று.

பயிற்சி :

1. சிங்கங்கள் குரங்கைக் கொல்ல எண்ணுவானேன்?
2. மரத்தின் மீதிருக்கும் குரங்கைப் பிடிக்கப் பெண் சிங்கம் சொன்ன யோசனை என்ன?
3. குரங்கு சிங்கங்களுக்கு அகப்படாமல் எப்படித் தப்பியது?
4. குரங்கைப் பிடிக்கச் சிங்கங்கள் என்ன செய்தன?
5. சிங்கங்கள் ஏன் தண்ணீருக்கு இரையாயின?
6. இந்தக் கதையைக் குரங்கு சொல்லுவது போலச் சொல்லு.
7. இக்கதையின் முதல், நடு, கடைப் பாகங்களை ஐந்து ஆறு வாக்கியங்களில் சுருக்கமாக எழுது.

12. வேடனும் புருக்களும்



1. ஒரு நாள் வேடனெருவன் பறவைகளைப் பிடிககக் காட்டில் வலையை வீசி, அரிசியைத் தூவி விட்டு, மரத்தின் பக்கமாக மறைந்திருந்தான்.

2. அமமரத்தின்மேலிருந்த காகம் ஒன்று அதைப் பார்த்தது. பறவைகளைப் பிடிப்பதற்கே வேடன் வலை வீசியிருக்கிருன் என்றறிந்து, காகம் பறவைகளுக்கு அதைச் சொன்னது. பறவைகள் வலையின் பக்கம் வாராமல இருந்தன.

3. ஆனல், தூரத்திலிருந்து ஒரு புறக்கூட்டம் அங்குப் பறந்து வந்தது. வேடன வலை வீசியிருப்பது புருக்களுக்குத் தெரியாது. கீழே அரிசி கிடப்பதைக் கண்டதும், அவை அதைத தின்ன இறங்கின. உடனே அவை வலையில சிக்கிக்கொண்டன.

4. மறைவிலிருந்த வேடன், புருக்கள் வலையில் அகப்பட்டுக்கொண்டதைக் கண்டதும் அங்கு ஓடி வந்தான். அவன் வருவதைப் பெரிய புரு பார்த்துவிட்டது.

5. "நண்பர்களே, இதோ வேடன் வருகிறான். நாம் சேர்ந்து வலையைத் தூக்கிக்கொண்டு பறந்து போனால்தான் உயிர் தப்பலாம்," என்று அப்புரு சொன்னது.



6. மற்றப் புருக்கள் அதற்குச் சம்மதித்தன. வேடன் நெருங்குவதற்குமுன் புருக்கள் வலையைத் தூக்கிக்கொண்டு மேலே பறந்து போயின.

7. வேடன் இருக்குமிடத்திலிருந்து வெகு தூரம் பறந்து போனபின், புருக்கள் கீழே இறங்கின. அங்கு ஒரு சுண்டெலி இருந்தது. வலையைக் கடித்துத் துண்டித்துத் தங்களை விடுவிக்கும்படி பெரிய புரு அந்தச் சுண்டெலியை மிகவும் வேண்டியது.

8. சுண்டெலி அவற்றின் மீது மனமிரங்கி, வலையைக் கடித்துத துண்டித்து, அவற்றை விடுவித்தது. வேடன் கையில் அகப்படாமல் தப்புவதற்கு அவை செய்த யோசனைக்காகச் சுண்டெலி அவற்றை மெச்சியது.

9. தங்களை வலையிலிருந்து விடுவித்ததற்காகச் சுண்டெலிக்கு நன்றி கூறிவிட்டுப் புருக்கள் சந்தோஷமாய்ப் பறந்து போயின.

பயிற்சி :

1. புருக்கள் ஏன் வலையில் அகப்பட்டுக்கொண்டன ?
2. வேடன் கையில் அகப்படாமல் தப்ப அவை என்ன செய்தன?
3. புருக்களிடம் எந்த நல்ல குணம் இருந்ததால் அவை தப்பின ?
4. சுண்டெலியினிடம் என்ன குணம் இருந்தது?
5. இக்கதையை வேடன் சொல்லுவதுபோலச் சொல்லு.
6. இதை ஆறு வாக்கியங்களில் சுருக்கி எழுது.

13. ஒரு பெண்ணின் வீரச்செயல்



1. பல வருஷங்களுக்கு முன் ஓர் ஊரில் ஒரு பெண்ணும் அவளுடைய மகளும் இருந்தார்கள். அவர்கள் ஊருக்கு வெளியில் ஒரு சிறு குடிசையில் வசித்து வந்தார்கள்.

2. அவர்கள் குடிசைக்கருகில் ஒரு காட்டாறு ஓடிக்கொண்டிருந்தது. அதைக் கடப்பதற்கு மரத்தால் ஒரு பாலம் கட்டப்பட்டிருந்தது. அதன்மீது இருப்புப்பாதையொன்று அமைந்திருந்தது.

3. ஒரு நாள் இரவில் பனி அதிகமாய்ப் பெய்தது. எங்குப் பார்த்தாலும் இருள் மூடியிருந்தது. அப்பொழுது குடிசையில் இருக்கும் ஏழைப்பெண்ணின் மகள் வெளியே வர நேர்ந்தது. அப்போது

அம்மரப் பாலம் உடைந்திருப்பதை அவள் கண்டாள்.

4. இரவில் சிறிது நேரத்திற்குள் அவ்வழியே இரயிலொன்று வரும். உடனே ஒரு யோசனை செய்யாவிட்டால், அது ஆற்றில் விழுந்துவிடும். அதனால் பெரிய விபத்தும் நேரிடும். அச்சிறுமி உடனே குடிசைக்குள் ஓடித் தான் கண்டதைத் தன் தாய்க்குச் சொன்னாள்.

5. உடனே இருவரும் கால தாமதம் செய்யாமல், தம் குடிசையிலிருந்த ஒரே கட்டிலையும் நாற்காலியையும் உடைத்து இருப்புப்பாதைக்கு அருகில் போட்டு, வெளிச்சத்திற்காகத் தீ மூட்டினர். அப்போது வெகு தூரத்தில் இரயில் வண்டி வரும் சத்தம் கேட்டது.

6. "அம்மா, நீ உன் சிவப்புச் சேலையில் ஒரு துண்டு கிழித்து, அதைக் குச்சியின் நுனியில் கட்டி வீசு. நான் ஒரு கொள்ளிக்கட்டையை எடுத்துக் கொண்டு வீசுகிறேன். இவற்றைப் பார்த்ததும், வண்டி ஓட்டுகிறவன் வண்டியை நிறுத்திவிடுவான்," என்று சிறுமி சொன்னாள்.

7. வண்டி வெகு வேகமாய் வந்தது. இவர்கள் காட்டின அபாயக் கொடியைப் பார்த்ததும், வண்டி ஓட்டுகிறவன் வண்டியைத் தூரத்திலேயே நிறுத்திவிட்டான்.

8. திடீரென வண்டி நிற்கவே, அதற்குக் காரணத்தை அறிய ஜனங்கள் அப்பெண்கள் இருக்கும் இடத்திற்கு வந்தார்கள். நேரவிருந்த அபாயத்தையும், அதைத் தடுக்க அப்பெண்கள் குளிர் இருள் ஒன்றையும் பாராட்டாமல் தைரியமாய்ச் செய்த உபகாரத்தையும் அறிந்த ஜனங்கள், அவர்களை வாழ்த்திப் புகழ்ந்தார்கள்.

பயிற்சி :

1. சிறுமி கண்ட ஆபத்து யாது ?
2. சிறுமியும் அவள் தாயும் ஏன் கட்டைகளை எரித்தார்கள் ?
3. இரயில் வண்டியை நிறுத்த எதைக் காட்ட வேண்டும் ?
4. சிறுமி கொள்ளிக்கட்டையை ஏன் வீசினாள் ?
5. வண்டியிலிருந்த ஜனங்கள் சிறுமியையும் அவள் தாயையும் ஏன் புகழ்ந்தார்கள் ?
6. அந்த வண்டியில் நீ பிரயாணம் செய்ததாகப் பாவித்துக்கொண்டு நடந்ததை விவரித்துச் சொல்லு.

14. காக்கையும் குறவனும்



1. ஆற்றங்கரையிலிருந்த சோலை ஒன்றில், பல பறவைகள் மரங்களில் கூடு கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தன. காகம் ஒன்று தன் குஞ்சுகளுடன் அச்சோலையில் வசித்து வந்தது. தினந்தோறும் காகம் வெளியே சென்று, இரை தேடி வந்து, தன் குஞ்சுகளுக்குக் கொடுக்கும்.

2. ஒரு நாள் காகம் வழக்கம்போல இரை தேடப் போயிற்று. அன்று அது, ஒரு குறவன் வீசியிருந்த வலையில் அகப்பட்டுக்கொண்டது. குறவன் அதைப் பிடித்துத் தன் கூடையில் போட்டுக்கொண்டு, வீடு திரும்பினன்.

3. மாலைநேரம் ஆயிற்று. காகம் வாராததைக் கண்டு குஞ்சுகள் வருந்தின; எங்கு அது வலையில் அகப்பட்டு இறந்ததோ என அஞ்சின; அது வழக்கமாய் வரும் வழியை ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தன.

4. அச்சமயத்தில், வேறு பறவைகளைத்தேடிக் கொண்டு குறவன் அந்தச் சோலைக்கே வந்தான். காகம் இருந்த கூடையைக் கீழே வைத்துவிட்டுச் சற்று இளைப்பாறினன்.



5. கூடையிலிருந்த காகத்திற்கு அச்சோலையே தான் வசிக்கும் சோலை என்பது தெரிந்தது. அதனல் அது தன் குஞ்சுகளை நினைத்து வருந்தி, 'கா! கா!! கா!!!' என்று கதறிற்று.

6. தாயின் குரலைக் கேட்டதும் குஞ்சுகள் அந்தப் பக்கமாகப் பார்த்தன. காகம் கூடையில் இருப்பதைக் கண்டு குஞ்சுகள் வாய் விட்டுப் புலம்பின.

7. குஞ்சுகளின் புலம்பல் குறவன் காதில் விழுந்தது. தாயைப் பறிகொடுத்த குஞ்சுகளின் துக்கம் அவன் மனத்தை இளக்கியது. உடனே அவன், அவற்றின்மீது இரக்கம்கொண்டு, கூடையைத் திறந்து காகத்தை வெளியே விட்டான்.

8. காக்கை சந்தோஷமாய்ப் பறந்துபோய், குஞ்சுகள் இருக்கும் தன் கூட்டை அடைந்தது. காகமும், அதன் குஞ்சுகளும் சேர்ந்து, குறவனைப் புகழ்வது போலக் கத்தின.

பயிற்சி :

1. இந்தக் கதையில் முதல், இடை, கடைப் பாகங்களை மூன்று வாக்கியங்களில் சொல்லு.
2. காகம் கூடையிலிருந்தது குஞ்சுகளுக்கு எப்படித் தெரிந்தது ?
3. காகத்தைக் கண்ட குஞ்சுகள் என்ன செய்தன ?
4. குஞ்சுகளின் புலம்பலைக் கேட்ட குறவன் என்ன செய்தான் ?
5. இந்தக் கதையைக் குறவன் சற்றுத்தூரம் போயிருந்த போது குஞ்சுகள் கீழே வந்து காகத்தை விடுவித்த தாக முடித்துச் சொல்லு.

2176